விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 019 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 23 புதன்கிழமை (07.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## புத்தளத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்திய ஐந்து பேர் உயிரிழப்பு

### சந்தேகத்தில் பெண் கைது

(புத்தளம்)

புத்தளத்தில் சட்டவிரோத மது பானம் அருந்திய ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் வென்னப்புவ பகுதியில் நேற்றுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் மூன்று பேரின் சடலங்கள் வைக்கலப் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இரு 15ஆம் பக்கம் பார்க்க



### போதை மாத்திரைகளுடன் யாழில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் மற்றும் நாயன்மார்கட்டு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட 860 போதை மாத்திரைகள் மற்றும் 15ஆம் பக்கம் பார்க்க

### பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைக்கு தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. 02ஆம் பக்கம் பார்க்க

### அவசர காலச்சட்டம் இரு மாதங்களுக்கு நீடிக்கப்பட வேண்டும்

அமைச்சர் ஆனந்த விஜேபால

(கொழும்பு)

நாட்டின் அவசரகாலச் சட்டம் குறைந்தது இன்னும் இரு மாதங்களுக்காவது நீடிக்கப்பட வேண்டும் என்று பொது 15ஆம் பக்கம் பார்க்க

## மின் கட்டணத்தை நிச்சயம் குறைப்போம்

# அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும்

### பாராளுமன்றில் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் குறைப்புத் தொடர்பில் அரசாங்கம் அளித்த வாக்குறுதி நிச்சயம் நிறைவேற்றப்படும் என எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி உறுதியளித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## மாகாண சபைத் தேர்தல் ஆராய தெரிவுக்குழு நியமனம்

### பாராளுமன்றில் தீர்மானம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய தேர்தல் முறைமையைத் தெரிவு செய்வது குறித்து ஆராய்வது தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கான தீர்மானம் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வினால் இந்தத் தீர்மானம் 15ஆம் பக்கம் பார்க்க

### வடமராட்சி சுண்டிக்குளத்தில் கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்தில் கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த கருப்பையா பத்மநாதன் என்பவரே படுகாயமடைந்தவராவார். 15ஆம் பக்கம் பார்க்க

## பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் ஆலய சிரமதான பணியில் ஈடுபட்டபோது விபரீதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் ஆலய வளா 15ஆம் பக்கம் பார்க்க




### தேசிய பேரழிவாக மாறியுள்ள போதையை இந்நாட்டிலிருந்து ஒழிக்க அனைவரும் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்

ஜனாதிபதி அநுர வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய பேரழிவாக மாறியுள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை இந்நாட்டிலிருந்து ஒழித்து, நாட்டின் எதிர்காலச் சந்ததியினரை இந்த அழிவிலிருந்து மீட்டெடுக்க அனைவரும் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார். 15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறாது நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 ஆயிரம் பேரை அரச சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை

## அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோ

அரச சேவையில் புதிதாக 72 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்ளவுள்ளதாக தொழிலாளர் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

2026ஆம் ஆண்டில் பொது மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான மற்றும் நெருக்கமான சேவைகளை வழங்கும் அரசு நிறுவனங்கள் உட்பட முழு அரச சேவையிலும் உள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

குறித்த வேலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஒப்புதலையும் 20 பில்லியன் ரூபாய் நிதியையும் அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பொருளாதார மேம்பாடு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வழங்கிய அறிவுறுத்தல்களுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரச சேவையில் உள்ள அந்தந்த வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள்கூட போட்டித் தேர்வை எதிர்கொண்ட பின்னரே ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மை மற்றும் திறமைகள் நிறைந்த ஒரு குழுவை அரச சேவையில் கொண்டு வருவது பொது மக்களுக்கு சேவைகளை வழங்குவதில் பெரும் உறுதுணையாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் 25,000 அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுகிறார்கள். ஓய்வு பெறுபவர்களுக்கு பதிலாக புதியவர்களை நியமிக்க வேண்டும். அதற்கமைய பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான குழு மூலம் வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ம-7)



யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள மூலிகைத் தோட்டத்தில் கிறீன்லேயர் (Greenlayer) சுற்றுச்சூழல் அமைப்பினால் 100 முழுநெல்லி மரக்கன்றுகள் நடும் பணி கடந்த 28.12.2025 அன்று கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவரின் தலைமையில் இயங்கிவரும் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் மேற்படி மூலிகைத்தோட்டம் நாவற்குழியில் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது

## போக்குவரத்துச் சங்கங்கள் தீர்மானம்

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் பேருந்து கட்டணங்கள் மற்றும் பாடசாலை மாணவர் போக்குவரத்து சிற்றூர்தி கட்டணங்களை உயர்த்துவதில்லை என போக்குவரத்து சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைத் திருத்தத்தை மேற்கொண்டது.

இதன்படி லங்கா ஓட்டோ டீசல் லீற்றொன்றின் விலை 2 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 279 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன,

தற்போதைய விலை அதிகரிப்பானது பேருந்து கட்டணங்களை உயர்த்தும் அளவுக்குப் பாரிய தாக்கம் செலுத்தவில்லை என்பதால், கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

அதேபோல் அகில இலங்கை மாகாணங்களுக்கிடையிலான பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத் கருத்துத் தெரிவிக்கையில்,

மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பாடசாலை சிற்றூர்திக் கட்டணங்களை உயர்த்துவதில்லை என முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டார். (ம-7)

# தமிழ் மக்களுக்கு நீதியையும் நிரந்தர தீர்வையும் வழங்குக

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நீதியையும் நிலையான அரசியல் தீர்வையும் வழங்குவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசு முன்வர வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ். தையிட்டி காணி உரிமையாளர்கள் அறவழியிலேயே போராடினார்கள். ஆனால் அவர்கள் மீது பொலிஸார் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

வேலன் சுவாமிகள் மிக மோசமாகக் கைது செய்யப்பட்டார். பொலிஸார் அராஜகத்தில் ஈடுபட்டனர். பௌத்த துறவி ஒருவரை இவ்வாறு கைது செய்ய முடியுமா? நீங்கள் இந்து ஆலயங்கள், கத்தோலிக்க தேவாலயங்களை இடித்து அழிக்கின்றீர்கள். அப்படியானால் வலுக்கட்டாயமாகக் கட்டப்பட்ட புத்த விகாரையை இடிக்க முடியாதா?

வடக்கு, கிழக்கில் இராணுவம் இன்றளவிலும் குவிக்கப்பட்டுள்ளது. இதனை மாற்றுங்கள். தமிழர்களுக்கு நீதியையும் நியாயமான தீர்வையும் வழங்க முன்வாருங்கள் என்றார்.

இந்த நாட்டில் நிமலராஜன், சிவராம், சுகிர்தராஜன் என ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களின் கொலைக்குக் காரணமானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை, நீதி கிடைக்கவில்லை என்றும் சிறீதரன் எம்.பி. மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# மேலதிகமாக 25,000 வீடுகளை நிர்மாணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசாங்கம்

டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 6,056 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. ஆனால் இவற்றுக்கு மேலதிகமாக மேலும் 25,000 வீடுகளை நிர்மாணிக்கவேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது.

எனினும் விரைவில் அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அறிவிக்கப்பட்ட 25,000 ரூபா மற்றும் 50,000 ரூபா கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்பட்ட பின்னர் ஏனைய கொடுப்பனவுகளை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றார். (ம-7)

### அளித்த வாக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தின் கொள்கைபடி 3 ஆண்டுகளுக்குள் 30 வீதம் மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்றார்.

இதேவேளை பேரிடர்களால் மக்கள் ஏற்கனவே சிரமப்பட்டு வரும் நேரத்தில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவதற்கான திட்டங்கள் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தியிலிருந்து சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின்சாரம் போன்ற மலிவான புதுப்பிக்கத்தக்க மூலங்களுக்கு மாறி மூன்று ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணங்களை 30 வீதம் குறைப்பதாக உறுதியளித்த போதிலும் அந்த உறுதிமொழிகளைக் கைவிட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்படுவதாகவும் அவர் கூறினார். (ம-7)

### நம்பிக்கை...

நேற்று முன்தினம் நடைபெற்ற அக்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தரம் 6 ஆங்கில பாடத் திட்டத்தில் பொருத்தமற்ற வலைத்தளத்திற்கான இணைப்பு வழங்கப்பட்டமை மற்றும் கல்விச் சீர்திருத்தங்களில் உள்ள சிக்கல்கள் காரணமாக பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாபநிதியை

# ஓய்வூதியமாகப் பெற நடவடிக்கை

## பிரதி தொழில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு) ---

தனியார் துறை ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதியை (EPF) ஒரே தவணையில் பெறுவதற்குப் பதிலாக, அந்த நிதியை ஓய்வூதியமாக பெறும் முறை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஓய்வு பெற்ற பிறகு ஊழியர்களின் சமூகப் பாதுகாப்புக்காகவே, சேமலாப நிதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், தனியார் துறை ஊழியர்கள் சேமலாப நிதியை ஒரே தவணையில் பெறும் போது அவர்களின் சமூகப் பாதுகாப்பு ஆபத்துக்குள்ளாகிறது.

இதன் காரணமாகவே, தனியார் துறை ஊழியர்களும் ஓய்வு பெற்றதும் காலம் முழுவதும் ஓய்வூதியம் பெறும் வகையில் ஓய்வூதியத் திட்டம் போன்ற ஒரு முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-8)

# தந்தையின் கொடூர செயலால் தீயில் கருகிய குடும்பம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தின் கலென்பிந்துனுவெவ பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் தந்தை(43) தாய் (36 வயது) மகள் 13 (வயது) உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று பதிவாகியிருந்தது.

சம்பவத்தில் பலத்த தீக்காயங்களுக்குள்ளான இரண்டு பிள்ளைகளும் பாட்டியும் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

15 வயது மகள் மற்றும் 20 வயது மகன், 66 வயது பாட்டி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த கணவர் அடிக்கடி மது அருந்துவது மற்றும் மனைவியைத் தாக்குவது தொடர்பாக பொலிஸாருக்கு பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் வந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த தகராறுகள் காரணமாக, மனைவி தனது மூன்று பிள்ளைகளுடன் தாயின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் கணவர் வீட்டிற்குள் நுழைந்து, வீட்டில் இருந்தவர்கள் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி)

# பச்சை மிளகாய் விலை மேலும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

பச்சை மிளகாயின் விலை எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கக்கூடும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அடையாளம் தெரியாத நோய் பரவுவதால் பச்சை மிளகாய் செடிகள் முழுமையான அளவு பாதிக்கப்பட்டுள்ளதாக மதவாச்சி மற்றும் கெப்பட்டிப்பொல விவசாயிகள் தெரிவித்துள்ளனர். தற்போது, ஒரு கிலோகிராம் பச்சைமிளகாய் சந்தையில் 700 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பச்சை மிளகாய் உள்ளிட்ட ஏனைய சில மரக்கறிகளின் விலையும் பண்டிகை காலத்தை முன்னிட்டு அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மின்கட்டணம் உயர்த்தப்பட்டால் உணவுப் பொருட்களின் விலைகள் உயரும்

## அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மின் கட்டணம் உயர்த்தப்பட்டால் அனைத்து வகையான உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்த்தப்படும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவு தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் எரிவாயு, முட்டை மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், தொழில்துறையை பராமரிப்பது மிகவும் நெருக்கடியாகி உள்ளதாக சங்கத்தின் தலைவர் ஹர்ஷனா ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்த போதிலும், உணவு மற்றும் பானங்களின் விலையை உயர்த்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் மின்சார கட்டணம் அதிகரித்தால், உணவகம் உரிமையாளர்களால் அதனை தாங்கிக் கொள்ள முடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# நுண்கடன் பிரச்சினைகளை தீர்க்க புதிய சட்டமூலம்


(கொழும்பு)

நுண்கடன் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இதனைக் குறிப்பிட்டார்.

நுண்கடன் பெற்ற சுமார் 200 பெண்கள் இதுவரை தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# அன்னை சிவத்தமிழ் செல்வியின் 101 ஆவது ஜனனதினம் இன்று



பேராசிரியர். சமாதிலிங்கம் சத்தியசீலன் (வரலாற்றுத்துறை)




திரு. சுருளிச்சாமி இராமதாஸ் அவர்கள் (தவில் வித்துவான்)



தண்ணுமை வேந்தன் மாரிமுத்து சிதம்பரநாதன் (மிருதங்க வித்துவான்)



திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் (இளைப்பாறிய அதிபர், இராமநாதன் கல்லூரி)



திரு. எல்லுப்போலை சின்னத்தம்பி (இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

(யாழ்ப்பாணம்)

அன்னை, சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 101 ஆவது பிறந்த நாள் அறக்கொடைவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட வைத்திய நிபுணர் சிவலிங்கராஜா ரகுராமன் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி. ஜனகா ரகுராமன் தம்பதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா மற்றும் திருமதி. சிவநயனி சர்வேஸ்வரா யாழ். மாவட்ட பதிவாளர் அலுவலகம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி [illegible] பரநாதன் தேவநேசன் மற்றும் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதர் அரசகேசரி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் வரலாற்றுத்துறை பேராசிரியர், சமாதிலிங்கம் சத்தியசீலன், தவில் வித்துவான் சுருளிச்சாமி இராமதாஸ், மிருதங்க வித்துவான் தண்ணுமை வேந்தன் மாரிமுத்து சிதம்பரநாதன், இராமநாதன் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம், ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எல்லுப்போலை சின்னத்தம்பி ஆகியோருக்கு "சிவத்தமிழ் விருது" வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பங்களாதேஷில் ஐ.பி.எல் ஒளிபரப்பிற்குத் தடை!

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் முஸ்தாபிசுர் ரஹ்மான் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பங்களாதேஷ் அரசாங்கம், நாட்டில் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) ஒளிபரப்பை காலவரையின்றி நிறுத்தி வைக்க உத்தரவிட்டது.

இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் அண்மைய முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது. இந்த உத்தரவை பங்களாதேஷ் அரசாங் கம் நேற்று முன்தினம் பிற்பகல் நிறைவேற்றியது.

இதன் விளைவாக, நாட்டில் உள்ள ரசிகர்கள் இனி எந்த தொலைக்காட்சி அலைவரிசை களிலும் அல்லது ஸ்ட்ரீமிங் தளத்தி லும் ஐ.பி.எல் போட்டிகளை சட்டபூர்வ மாகப் பார்க்க முடியாது.

கடந்த சில நாட்களாக, பங்களா தேஷில் இந்துக் கள் கொல்லப்படும் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. இது இந்தியாவிற் கும் பங்களா தேஷுக்கும் இடையி லான உறவுகளை மோசமாக்கியுள் ளது. இதன் ஒரு பகுதியாக கடந்த சனிக்கிழமை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிலிருந்து முஸ்தாபிசுர் ரஹ்மானை விடுவிக்க உத்தரவிட்டது.

மினி ஏலத்தில் 9.20 கோடி இந்திய ரூபாய்க்கு ரஹ்மானை தேர்வு செய்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பின்னர் அந்த உத்தரவு களுக்கு அமைவாக அவரை விடு வித்தது. இதனைத் தொடர்ந்து பங்களாதேஷ் அர சாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (3)




# ரி–20 தொடர்
## இலங்கையை வந்தடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணி



சர்வதேச ரி-20 தொடருக்காக பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்தது.

அதன்படி, அந்த அணி மாலை சுமார் 5.15 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரை யிறங்கியது.

அவர்களை ஸ்ரீலங்கா கிரிக் கெட் அதிகாரிகள் விமான நிலை யத்தில் வரவேற்றனர்.

இலங்கை சுற்றுலா மேம் பாட்டு பணியகத்தின் பிரதிநிதி களும் வரவேற்பில் பங்கேற்ற னர்.

இன்று ஆரம்பமாகும் மூன்று போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரில் இலங்கையும் பாகிஸ் தானும் போட்டியிடவுள்ளன.

பாகிஸ்தான் அணியின் இந்த சுற்றுப்பயணம் அரசாங்கத்தின் "இலங்கையை மீண்டும் கட்டியெ முப்புதல்" திட்டத்தை மேம்படுத் துவ தற்கு அர்ப்பணிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம் பமாகவுள் ளதுடன் எதிர்வரும் போட்டிகள் 9 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடை பெறும். அனைத்துப் போட்டிகளும் தம் புள்ளை கிரிக்கெட் மைதானத் தில் நடைபெறும். (3)

# இராசிபலன்

07.01.2026,
மார்கழி 23 , புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 11.40 மணிவரை

மகம் பிற்பகல் 4.37மணிவரை
சுபநேரம் 5.02-6.32 மணிவரை
இராகுகாலம் 12.32-2.02 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்

**வளவன்**

**மேஷம்** – வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுயமுயற்சி யின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** – சுப நிகழ்வுகளில் கல ந்து மகிழும் வாய்ப் புண்டு, வருமானம் திருப்தி தரும் வகை யில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவா கும்.

**துலாம்** – திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், ஆடம்பரப் பொருட் களை வாங்கும் எண் ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதை கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கௌவரக் குறைவான நாள்.

**ரிஷபம்** – பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வழிபாடு முன்னேற்றம் தரும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வாகன சுகத்தால் வளம் காணும் நாள்.

**சிம்மம்** – மனக்குழப்பங்கள் அகல மாற்றினத்தவர் களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப் புண்டு, திடீர் பயணங்கள் ஏற்பட லாம், அடுத்தவர் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** – விருந்தினர் வருகை யுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங் கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெற லாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக் கும்.

**கும்பம்** – குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய தொழில் வாய்ப்புக் கள் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் முன்ளேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** – பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி** – வழிபாட்டால் சிறப்பி னைக் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**தனுசு** – வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத் துவச் செலவுகள் குறை ந்து மனநிம்மதி கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற் றம் காணும் நாள்.

**மீனம்** – அலுவலகப் பணிகள் துரிதமாகும், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர் புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

அதிக செல்வமுடையவர்கள் நியாயத்தை சொன்னால் கூட கேட்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிட்டல் சாதனங்களின் அதீத பயன்பாட்டால் வீட்டிற்குள்ளே முடங்கும் சிறுவர்கள்

## எச்சரிக்கை விடுக்கும் சுகாதார நிபுணர்கள்

(கொழும்பு)

சிறுவர்கள் அதிக நேரம் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்துவதால், அவர்களுக்கு அவசியமான விட்டமின் டி சத்து குறைவடைந்து வருவதாக சுகாதார நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் லப் டெப்கள் போன்றவற்றின் அதீத பயன்பாடு காரணமாக சிறுவர்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

இதனால், விட்டமின் டி சத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகாலை நேரத்துச் சூரிய ஒளி அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

விட்டமின் டி இயற்கையாக உற்பத்தி செய்யப்படுவதற்கு காலை நேரச் சூரிய ஒளி இன்றியமையாதது.

இது சிறுவர்களின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது.

இந்தச் சத்து குறையும் போது, அவர்கள் இலகுவாக நோய்த் தொற்றுகளுக்கு ஆளாக நேரிடும் என சிறுவர் நல விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.

சூரிய ஒளி கிடைப்பதுடன் மாத்திரமன்றி, வெளிப்புற விளையாட்டுக்களில் ஈடுபடுவது சிறுவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கும் மிக அவசியமானது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் "ஸ்கிரீன் டைம்" எனப்படும் டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தும் நேரத்தைக் குறைக்க வேண்டும்.

அதிகாலை வேளையில் பிள்ளைகளை வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிப்பதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உறுதிப்படுத்த முடியும் என மருத்துவர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் தமிழ்ப்பாட ஆசிரியராகக் கடமையாற்றிய

திருமதி: இராஜலக்ஸ்சுமி நகுலேஸ்வரன்

அவர்கள் 03.01.2026 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1896)



ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.


# திரிபோசாவின் தரத்தை மேம்படுத்த உலக உணவுத்திட்டம் நிதியுதவி

(கொழும்பு)

'இலங்கையில் மேம்படுத்தப்பட்ட திரிபோசா வேலைத்திட்டத்திற்கான தாங்குதிறன் கொண்ட தரப்பண்புடன் கூடிய சோளத்தை அடிப்படையாகக் கொண்ட உணவு முறைமையைக் கட்டியெழுப்பல்: பயிரிடுவோம் கட்டியெழுப்புவோம்' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக உணவுத் திட்டத்தின் மூலம் கருத்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, திரிபோசா உற்பத்திக்குத் தேவையான சோளத்தின் தரப் பண்பை அதிகரிப்பதற்கும், மற்றும் திரிபோசா விநியோகத்தை பலப்படுத்தும் நோக்கிலும் உத்தேசக் கருத்திட்டத்தின் கீழ் அநு ராதபுரம், மொனராகல மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 7,500 சோளச் செய்கையாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

இச் செயற்றிட்டத்தினூடாக திரிபோசாவின் தரம் மற்றும் விநியோகம் என்பன மேம்படும் என உலக உணவுத்திட்டம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (க-8)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி (முன்பதிவு செய்து வரவும்)

(C-4761)



## முகாமைத்துவ உதவியாளர் (பயிலுனர்)

**கல்வித் தகைமை**

1. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உள்ளடங்கலாக 6 பாடங்கள் சித்தி
2. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்கள் சித்தி
3. கணனி அறிவு முக்கியமானது

சம்பளம் - ரூபா 30000/- (அடிப்படை) + இதர கொடுப்பனவு ETF+EPF

சுயவிபரக் கோவையுடன் (தொலைபேசி இலக்கம் கட்டாயமானது) 16.01.2026 ஆம் திகதிக்கு முன்பாக **தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை, கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம், சுன்னாகம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடம்.

(C-4763)



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
23.12.1947

மறைவு
05.01.2026

### திருமதி.சிவஞானவதி விஸ்வலிங்கம்

(முன்னாள் அதிபர் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி)

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று எட்டு வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றிய அமரர். திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம் அம்மா அவர்கள் தனது நிர்வாகத் திறமையால் பாடசாலைக்கு பல பௌதீகவளங்களைப் பெற்று பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்து பல மாணவர்களை உயர்தரத்தில் சித்தியடைய வைத்து பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி பாடசாலையைப் பெருமைப்படுத்திய ஒரு ஜெகஜோதி விளக்கு. அத்தகைய விளக்கு அணைந்து விட்டது என்ற செய்தி பாடசாலைச்சமூகத்திற்கு மீளாத்துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய பெருமைக்குரியவரை இழந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்குபெறுவதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல நல்லைநாயகி உடனுறையும் நல்லைநாத சுவாமியின் பாதாரவிந்தங்களை அடைந்து அமைதிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (1895)

ஆழ்ந்த துயருடன்- யா/செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள்,
- ஆசிரியர்கள், நலன்புரிகள் சங்[illegible]



## வட இலங்கைச் சங்கீத சபை நடாத்தும்

**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்**
**179 ஆவது இசை ஆராதனை - 2026**

காலம் - 09.01.2026 வெள்ளிக்கிழமை
இடம் - வட இலங்கைச் சங்கீதசபை கலையரங்கம்
நேரம் - காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை

**தலைவர்**

திருமதி.**மாலதி முகுந்தன்** அவர்கள்
யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும்
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

**பிரதம விருந்தினர்**

பேராசிரியர் கலாநிதி **என்.சண்முகலிங்கன்** அவர்கள்
முன்னாள் துணை வேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**சிறப்பு விருந்தினர்**

கலைப்பிரவாகம் **பொன்.ஸ்ரீ.வாமதேவன்** அவர்கள்
ஓய்வு நிலை இசை ஆசிரியர்
வருகை இசைத்துறை விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு- இசைக் கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளுடன் வருகை தருவது ஆராதனை நிகழ்வைச் சிறப்பிக்கும்.

செயலாளர்,
வட இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடம்.

(C-4762)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல திருவிழாவிற்கான முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த திருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடனான முன்னாயத்த கூட்டம் பிரதேச செயலர் என். பிரபாகரன் தலைமையில் நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கடந்த வருட திருவிழாவின்போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாகவும் இவ்வருட திருவிழாவில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.




குறித்த கலந்துரையாடலில் நெடுந்தீவு உதவி பிரதேச செயலர் நெடுந்தீவு கடற்படையின் கட்டளை அதிகாரி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த திருவிழாவானது பெப்ரவரி மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)

## இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன

## பொதுமக்கள் அவதானம்!



(தருமபுரம்)

இரணைமடுக்குளத்தின் 6 வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளமையால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

காலநிலை எதிர்வு கூறல் மற்றும் இரணைமடுக்குள நீரேந்து பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியை கருத்தில் கொண்டு இரணைமடுக்குளத்தின் ஆறு வான் கதவுகள் நேற்றுக் காலை 9 மணிக்கு திறந்து விடப்பட்டுள்ளன.


ஆறு வான்கதவுகளின் இரண்டு வான் கதவுகள் 6 இஞ்சிக்கும், நான்கு வான்கதவுகள் ஒரு இஞ்சிக்கும் திறந்து விடப்பட்டுள்ளன. 0.149Mcm நீர் வெளியேற்றப்படுகின்றது. தொடர்ந்து மழை எதிர்வு கூறல் காணப்படுகின்ற நிலையில் தாழ் நிலப் பகுதியில் உள்ளவர்கள் அவதானமாக செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-316)

## கிழவன்காடு கலாமன்றத்தின் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 179 ஆவது இசை ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்கிளை- காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 179 ஆவது இசை ஆராதனை விழா இன்று புதன்கிழமை பி.ப 4 மணியளவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் தொடக்கவு ரையினை ஓய்வு நிலை இசை ஆசிரியர் இசைக் கலைமணி திருமதி. யசோதா ஸ்ரீகுமாரன் வழங்க வுள்ளார்.

நிகழ்வில் தீபாராதனை, ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் இணைந்து வழங்கும் மங்கள இசை, ஈழத்து பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள் மற்றும் வாத்தியக்கலைஞர்கள் இணைந்து வழங்கும் இசை ஆராதனை, தியாகராஜ சுவாமிகள் அருளிய கீர்த்தனைகளில் ஒவ்வொரு கீர்த்தனை வீதம் விரும்பிய கலைஞர்கள் தனியாக அல்லது குழுவாக இணைந்து வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (8)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு பெயர்ப்பலகை நேற்று முன்தினம் நாட்டப்பட்டுள்ளது.


(படம்- மகாலிங்கம்)

# வடமராட்சி கடற்கரையில் கரையொதுங்கும் ஆமைகள்

(அராலி)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாட்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. அந்த வகையில் நேற்றைய தினம் ஆமை ஒன்றின் இறந்த உடல் கரையொதுங்கி உள்ளது.

கடல் சீற்றம் மற்றும் கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரை யொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். ஆமைகளை பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்துவதும்



சட்டவிரோதம் என்பதால் கரை யொதுங்கிய ஆமைகள் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையில் உருக்குலைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 800 | 700 | 500 | 500 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 1400 | 900 | 1200 | 800 | 1000 | 700 |
| தக்காளி | 600 | 500 | 500 | 600 | 500 | 430 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 150 | 80 |
| கோவா | 300 | 300 | 350 | 400 | -- | 250 |
| கரட் | 600 | 520 | 600 | 600 | 500 | 420 |
| பூசணி | 160 | 180 | 120 | 200 | -- | 140 |
| புடோல் | 400 | 300 | 300 | 250 | 300 | 200 |
| வாழைக்காய் | 100 | 140 | 120 | 160 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 400 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 200 | 200 | 200 | -- |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 800 | 600 | 450 |
| வெண்டக்காய் | 400 | 250 | 200 | 500 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 260 | 300 | 350 | -- | 300 |
| பயற்றங்காய் | 600 | 600 | 700 | 600 | 450 | 200 |
| லீக்ஸ் | 500 | 550 | 600 | 600 | -- | 420 |
| பீற்றூட் | 800 | 600 | 1000 | 1000 | 800 | 800 |
| கறிமிளகாய் | 1000 | 1100 | 1000 | 1400 | 900 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 650 | 800 | 600 | 550 | 420 |
| கத்தரிதம்புள்ள | 400 | 600 | 600 | 450 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 60-140 | 200 | 140 | -- | 130 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 250 | 300 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 200 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 800 | 800 | 1000 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 200 | 200 | 170 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | -- | 45 |
| [illegible] | 100 | 150 | 100 | 150 | -- | 80 |

## நாயாறு பாலத்தில் பயணிக்கும் பொதுமக்கள் ஒரு வழிப் பாதையை பயன்படுத்துங்கள்

அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு



(நெளுக்குளம்)

நாயாறு பாலத்தின் ஊடாக பயணிக்கும் பொது மக்கள் பாலத்தை ஒரு வழிப் பாதையாக மாத்திரம் பயன்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு நாயாறு பாலத்தின் திருத்தப் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. தற்போது சில சிறிய பணிகள் மட்டும் மீதமுள்ளன. அவையும் இன்றைய தினம் முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு, RDA நாயாறு பாலம் வழியாக பொதுமக்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதனால் நாயாறு பாலம் வழியாக செல்லும் பொது மக்கள் பாலத்தின் எந்த இடத்திலும் வாகனங்களை நிறுத்தாமல் பாலத்தை ஒரு வழிப்பாதையாக மட்டும் பயன் படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பருத்தித்துறை கடற்கரை வீதியினை

# புனரமைத்து தாருங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

**கடும் கடல்கொந்தளிப்பு காரணமாக முற்றாக அழிவடைந்துள்ள பருத்தித்துறை - மூர்க்கம் கடற்கரைவீதியினை புனரமைத்துத்தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**




பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட மூர்க்கம் கடற்கரை பகுதியில் டித்வா புயல் காரணமாக பாரிய கடலரிப்பு ஏற்பட்டிருந்தது. அங்குள்ள கொங்றீட் வீதியும் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டி ருந்த நிலையில் மணல் மூடைகள், கற்கள் கொண்டு தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் கடந்த சில நாட்களில் கடுமையான கடல்கொந்தளிப்பு நிலவி வரும் நிலையில் குறித்த கொங்றீட் வீதி தாழிறங்கியுள்ளது.

அத்துடன் சுற்றுலாவிகள் இருப்பதற் காக அமைக்கப்பட்ட வட்ட வடிவ இருக் கைகள் உள்ளிட்ட சீமெந்தினால் அமைக் கப்பட்ட இருக்கைகள், நடைபாதை உள்ளிட்ட கட்டுமானங்கள் அனைத்தும் கடலரிப்பினால் முற்றாக அழிவடைந்து காணப்படுகின்றன.

வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் ஏராளமான உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரும் சுற்றுலாவி கள் வந்து செல்கின்ற இடமாக இக் கடற்கரை காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த கடற்கரை வீதியினை புனரமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-60)




# இன்று ஒரு தகவல் 514



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அன்னை உள்ளம்

ஒரு வயதான அம்மா.

தினமும் தவறாமல் கோயிலுக்குப் போவார். சாமியிடம் வேண்டிக் கொள்வார்.

என்ன வேண்டிக்கொள்வார் தெரியுமா?

"நான் இறந்துபோனால் நேராக நரகத்துக்குப் போய்ச் சேரணும். அதற்கு அருள் புரியவேண்டும் என்று வேண்டிக் கொள்வார்.

தினமும் இந்த அம்மா இப்படி வேண்டிக்கொண்டே இருப்பதை அந்த கோயிலில் உள்ள ஒருத்தர் கவனித்துக் கொண்டே வந்தார்.

ஒரு நாள் நேராகவே கேட்டுவிட்டார்.

"ஏனம்மா! எல்லோரும் சொர்க்கத்துக்குப் போகவேண்டும் என்று தான் ஆசைப்படுவார்கள். ஆனால் நீங்கள் நரகத்துக்குப் போக வேண்டும் என்று சாமியிடம் வேண்டுதல் செய்கின்றீர்களே இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

இதற்கு அந்த அம்மா சொன்னாங்களாம்:

"ஐயா நான் நகரத்துக்குப் போய்ச்சேர வேண்டும் என்று ஆசைப்படுவது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்றால், எனக்கு ஒரு மகன் இருக்கின்றான். நீண்டகாலமாக எனக்குப் பிள்ளை இல்லாமல் இருந்து அதற்குப்பின்னரே இவன் பிறந்தான். ஒரே பிள்ளை என்பதனாலே அவனை ரொம்பவும் செல்லமாக வளர்த்துவிட்டேன்.

ஆனால் அவன் சேரக்கூடாதவர்களோடு சேர்ந்து ரொம்ப கெட்டுப் போய்விட்டான். பஞ்சமாபாதகங்கள் அத்தனையும் செய்கிறான்.

அவன் செய்கின்ற பாவச்செயல்களுக்கு நிச்சயமாக அவனுக்கு சொர்க்கம் கிடைக்காது. அவன் நரகத்துக்குத் தான் போவான். அதிலே சந்தேகமே இல்லை!

அதனாலே அவனுக்கு முன்னாடி நான் அங்கே போய் சேர்ந்துவிட்டேன் என்றால் அவன் வந்து சேர்ந்ததும் அவனைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ள முடியும். பணிவிடை செய்ய முடியும்.

அதனாலேதான் இப்பவே சாமியிடம் வேண்டிக் கொள்கின்றேன் நரகத்துக்குப் போய்ச்சேர வேண்டும் என்றார் களாம் அந்த அம்மா.

தாயுள்ளம் என்பது இதுதான். இதற்கு ஈடாக வேறு எதையும் சொல்ல முடியாது.

அன்னை திரேசா நிறுவி நடத்திக்கொண்டு வந்தார்களே "மிஷனரீஸ் ஆஃப் சாரிட்டி" அங்கே உள்ள அறிவிப்புப் பலகையிலே உள்ள வாசகம் என்ன தெரியுமா?

"நோயாளிகளை இங்கு அழைத்து வராதீர்கள். மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களை மட்டும் இங்கு விட்டுச் செல்லுங்கள்!" என்று அதிலே எழுதி வைத்திருக்கிறார்களாம்.

மனிதர்களாலே கைவிடப்பட்டவர்களுக்குச் சேவை செய்பவர்களை ஏற்கனவே இந்த உலகத்திலே பார்த்திருக் கின்றோம்.

மருத்துவர்களாலேயே கைவிடப்பட்டவர்களுக்குச் சேவை செய்கின்றவர்களை இதற்கு முன்னாடி நாம் பார்த்ததில்லையே!

அப்படிப்பட்ட அன்னை திரேசா...

வெள்ளிக்கிழமை கொஞ்சநேரம் பிராத்தனை செய்திருக் கின்றார்கள். அப்புறம் படுக்கைக்குப் போய் இருக்கிறார்கள். இரவு உணவை முடித்துக் கொண்டு தண்ணீர் குடிக்க முயற்சி செய்தபோது டம்ளர் தவறி கீழே விழுந்திருக்கு.

நெஞ்சுலே வலி..

எத்தனையோ பேரின் சுவாசக் காற்றுக்குக் காரணமாக இருந்த அவர்கள் சொன்ன கடைசி வார்த்தைகள்:

"இனிமேல் என்னாலே சுவாசிக்க முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தாய்நாட்டிற்காக மீண்டும் ஆயுதம் ஏந்துவேன்! ட்ரம்பிற்கு கொலம்பிய ஜனாதிபதி சவால்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நேரடி அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, தனது தாய் நாட்டின் இறையாண்மையைக் காக்க மீண்டும் ஆயுதங்களை ஏந்தத் தயார் என கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ அதிரடியாக அறிவித்துள்ளார்.

சமீபத்தில் வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவினால் கைது செய்யப்பட்டதை அடுத்து, கொலம்பியாவிற்கும் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

"கொலம்பிய ஜனாதிபதி பெட்ரோ ஒரு நோய் வாய்ப்பட்டவர், அமெரிக்காவிற்கு கொகேய்ன் கடத்துவதையே அவர் விரும்புகிறார்" என ட்ரம்ப் தனிப்பட்ட ரீதியில் விமர்சித்திருந்தார். இந்நிலையில், ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஜனாதிபதி பெட்ரோ பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நான் மீண்டும் ஆயுதம் ஏந்த மாட்டேன் என ஏற்கனவே சபதம் செய்திருந்தேன். ஆனால், தாய் நாட்டிற்காக அந்தச் சபதத்தை முறித்து மீண்டும் ஆயுதம் ஏந்தவும் தயங்க மாட்டேன்."

"நான் போதைப் பொருள் கடத்தல்காரன் அல்ல. எனது ஒரே சொத்து எனது குடும்ப வீடுதான். அதற்கான தவணையை இன்னும் எனது சம்பளத்திலிருந்தே செலுத்தி வருகிறேன். எனது வங்கிக் கணக்கு விபரங்கள் வெளிப்படையானவை."

"என்னைச் சட்ட விரோதமாகக் கைது செய்ய முயன்றால், எனது மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள். அமெரிக்காவுக்கும் கொலம்பியாவுக்கும் இடையிலான உறவை முறிக்க ட்ரம்ப் முயல்கிறார்." இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை ஒரு "சட்டவிரோத அச்சுறுத்தல்" என பெட்ரோ வர்ணித்துள்ளார்.

மதுரோவின் கைதைத் தொடர்ந்து கொலம்பிய ஜனாதிபதியின் இந்த ஆவேசமான அறிக்கை சர்வதேச அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)




வெனிசுலா மீது திடீர் தாக்குதல் நடத்திய அமெரிக்கா, அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சிறைபிடித்து அமெரிக்கா அழைத்து வந்தது.

வெனிசுலா எண்ணெய் இருப்பை இனி அமெரிக்க நிறுவனங்களே நிர்வகிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு சாதகமான அரசு அமையும் வரை அங்கு அமெரிக்க இராணுவம் தங்கியிருக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார்.

இதற்கிடையே வெனிசுலா உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, துணை ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார்.

அமெரிக்கா அழைத்துவரப்பட்ட மதுரோ மற்றும் அவரது மனைவி மீது போதைப்பொருள் பயங்கரவாதம், கொக்கேய்ன் இறக்குமதி செய்வதற்கான சதி, இயந்திர துப்பாக்கிகள் மற்றும் அழிவு ஏற்படுத்தும் சாதனங்களை வைத்திருத்தல் ஆகிய நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நியூயோர்க் நீதிமன்றில் நிக்கோலஸ் மதுரோ மீதான விசாரணை நடைபெற்றது. நீதிபதி ஆல்வின் ஹெல்லர்ஸ்டைன் தலைமையில் விசாரணை நடைபெற்றது. கடும் பாதுகாப்புக்கு மத்தியில் மதுரோவும் அவரது மனைவியும் நீதிமன்றம் அழைத்து வரப்பட்டனர்.

## இனி ரோபோக்களும் வலியை உணரும்

### தொழில் நுட்பத்தில் பாரிய புரட்சி

மனிதர்களைப் போலவே ரோபோக்களும் வலி மற்றும் உணர்வுகளை உடனடியாக உணர்ந்து எதிர்வினை ஆற்றும் செயற்கைத் தோலை உருவாக்கி ஹாங்காங் நகரப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அசத்தியுள்ளனர்.

Neuromorphic E-Skin என்ற தோல் மூலம் உணர்வுகளை உடனுக்குடன் ரோபோக்கள் கண்டறிந்து, தற்காத்துக் கொள்ளும் திறனை பெறுகிறது.

"மின்னணு தோல்" தொழில்நுட்பம் உலகில் ஒரு மிகப்பெரிய புரட்சியாகப் பார்க்கப்படுகிறது. மனிதர்களைப் போலவே மென்மையான உணர்வுகளை உணரக்கூடிய "மின்னணு தோல்" (Electronic Skin அல்லது E-Skin) தொழில் நுட்பம் ரோபோக்களின் எதிர்காலத்தையே மாற்றப் போகிறது.

இது மிக மெல்லிய, நெகிழ்வான ஒரு படலம். இதில் ஆயிரக்கணக்கான நுண்ணிய சென்சார்கள் பொருத்தப்பட்டிருக்கும். மனித உடலில் உள்ள நரம்புகள் எப்படி மூளைக்குத் தகவல்களை அனுப்புகிறதோ, அதேபோல இந்த சென்சார்கள் தொடுதல், அழுத்தம் மற்றும் வெப்பநிலையை ரோபோவின் கணனிக்கு அனுப்பும். ஒரு ரோபோ முட்டையை உடைக்காமல் தூக்குவதற்கும், அதே சமயம் ஒரு கனமான இரும்புத் தூணைத் தூக்குவதற்கும் எவ்வளவு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை இந்த உணர்வு தான் தீர்மானிக்கும்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் அமெரிக்காவின் ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளனர்.

சில ஆய்வுகளில், மனித நரம்புகளை விட வேகமாகச் செயற்படும் "செயற்கை நரம்பு மண்டலங்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் தொழில்நுட்பம் முழுமையடையும் போது, ரோபோக்கள் வெறும் இயந்திரங்களாக இல்லாமல், மனிதர்களுக்கு இன்னும் நெருக்கமான, பாதுகாப்பான உதவியாளர்களாக மாறும். (3)



## ஒரு நாட்டின் அரசியல் ச தலையிடுவது சட்ட

### வெனிசுலா விவகாரத்தில் ஐ.

(நியூயோர்க்)

வெனிசுவேலா மீது தாக்குதல் நடத்தி அந்நாட்டின் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவை அமெரிக்க படைகள் கைது செய்ததற்கு ஐ.நா பாதுகாப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

வெனிசுலா மீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கூட்டம் நடத்த கொலம்பியா கோரிக்கை வைத்தது.

இதனைத் தொடர்ந்து, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் அவசரக் கூட்டம் திங்கட்கிழமை நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ன் நிரபராதி...!

(...ஷிங்டன்)

...யார்க்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ...லா நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ ... நிரபராதி என திட்டவட்டமாக அறிவித்துள்

நீதிமன்றத்தில் பேசிய மதுரோ, தான் நிரபராதி என்றும் குற்ற மற்றவன் என்றும் கூறி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

தொடர்ந்து, நான் ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் ஜனாதிபதி. சர்வதேச சட்டங்களை மீறி, காரகஸில் உள்ள எனது இல்லத்திலேயே வைத்து சட்ட விரோதமாக கடத்தப்பட்டேன்.

என்னை ஒரு பயங்கரவாதியைப் போலவும், போதைப் பொருள் கடத்தல்காரனைப் போலவும் சித்தரிக்க அமெரிக்கா முயற்சிக்கிறது. ஆனால் நான் ஒரு கண்ணியமான மனிதன்.


அமெரிக்கா தனது அரசியல் இலாபத்திற்காகவும், வெனிசுலாவின் இயற்கை வளங்களைக்



கைப்பற்றவும் என் மீது இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது" என்றுதெரிவித்தார். மேலும் தானே இன்னும் வெனிசுலாவின் ஜனாதிபதியாக இருக்கிறேன் என மதுரோ நீதிமன்றத்தில் பல முறை வலியுறுத்தினார்.

மேலும் மதுரோவின் மனைவி அட்ரியானாவும் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார். இந்நிலையில் வழக்கின் அடுத்தகட்ட விசாரணை மார்ச் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (3)

## இருட்டில் சுற்றித் திரியும் புதிய கிரகம் கண்டுபிடிப்பு!



சூரியனும் இல்லாமல் எந்தவொரு குடும்பமும் இல்லாமல் இருட்டில் சுற்றித்திரியும் ஒரு கோளை ஸ்பீக்கிங் யுனிவசிற்றியை சேர்ந்த சுபோ டோங் தலைமையிலான குழுவினர் கண்டு பிடித்துள்ளனர்

குறித்த இந்த கிரகம் ரோட்பிளானட் அல்லது அனாதை கிரகம் என அழைக்கப்படுகின்றது

இந்த கிரகம் பார்ப்பதற்கு சனிகிரகத்தை ஒத்ததாக இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது எப்படி இத்தனை காலமும் மறைந்து இருந்துள்ளது தெரியுமா?

சாதாரண கிரகங்களின் மேல் நட்சத்திரங்களின் ஒளிபட்டால் அது நமக்கு தெரியும். ஆனால் இந்த கிரகத்தில் நட்சத்திரங்கள் இல்லை அதனால் மைக்ரோ லென்ஸிங் என்ற அபூர்வமான முறையை வைத்து இதனை கண்டு பிடித்துள்ளனர்.

அதாவது இந்த கிரகம் நட்சத்திரத்தை கடக்கும் போது அதனுடைய ஒளியை லேசாக வளைக்கின்றதாம் அந்த மாற்றத்தை வைத்தே விஞ்ஞானிகள் அங்கு ஏதோ உள்ளது என அதனை கண்டுபிடித்துள்ளனர். பூமியில் உள்ள ரெலஸ் கோப் மூலமாகவும் விண்வெளியில் உள்ள கயாஸ் பீஸ் ரெலஸ்க்கோப் மூலமாகவும் இதனை துல்லியமாக அளந்துள்ளனர். இந்த கிரகத்தின் எடை வியாழனை விட 22 சதவீதம் உள்ளது என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (3)

## ...சுதந்திரத்தில் ...விரோதம்

### ...நா கண்டனம்

...பெற்றது.

இந்த கூட்டத்தில் சீனா, கொலிம்பியா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், மதுரோவை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

மேலும், இந்த கூட்டத்தில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸின் உரையை துணைப் பொதுச் செயலாளர் ரோஸ்மேரி டிகாப்லோ வாசித்தார்.

அவர் உரையில் தெரிவித்ததாவது:

"நாடுகளின் இறையாண்மை, அரசியல் சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகிய கொள்கைகளை மதிக்க வேண்டும்.

நாட்டில் நிலைத்தன்மை மேலும் தீவிரமடையக் கூடும் என்பது குறித்தும், அதனால் பிராந்தியத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் குறித்தும், நாடுகளுக்கு இடையேயான உறவுகள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதற்கு இது முன்னுதாரணமாக அமையக் கூடும் என்பது குறித்தும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த கூட்டத்தில் அமெரிக்க தூதர் மைக் வால்ட்ஸ் பேசியதாவது:

"அமெரிக்க நீதித்துறையால் குற்றம்சட்டப்பட்ட இரண்டு தேடப்படும் குற்றவாளிகளான மதுரோ மற்றும் அவரது மனைவி ஆகியோருக்கு எதிராக அமெரிக்க இராணுவத்தால் எடுக்கப்பட்ட துல்லியமான சட்ட அமுலாக்க நடவடிக்கை ஆகும்.

வெனிசுவேலா அல்லது அந்நாட்டு மக்களுக்கு எதிராக எந்தப் போரும் இல்லை. நாங்கள் அந்நாட்டைக் கைப்பற்றவில்லை" எனத் தெரிவித்தார். (3)

## ஒத்துழைக்கவில்லை என்றால் மீண்டும் தாக்குவோம்!

### வெனிசுலாவிற்கு ட்ரம்ப் மிரட்டல்





(வோஷிங்டன்)

வெனிசுலா இடைக்கால ஜனாதிபதி அமெரிக்காவிற்கு ஒத்துழைக்காவிட்டால் மதுரோவை விட கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,வெனிசுலாவில் எண்ணெய் தொழிலைத் தொடங்குவதற்கும், போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கும் அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அந்நாட்டு அரசு முட்டுக்கட்டை போட்டால், மீண்டும் ஒருமுறை இராணுவத் தாக்குதலுக்கு உத்தரவிடத் தயங்க மாட்டேன்.

சிறைபிடிக்கப்பட்டுள்ள நிக்கோலஸ் மதுரோ மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும்" என்று தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டால் கொலம்பியா மற்றும் மெக்சிகோ நாடுகள் மீதும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் கியூபாவின் கம்யூனிச ஆட்சி தானாகவே வீழும் நிலையில் தான் உள்ளது என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதற்கிடையே இந்த எச்சரிக்கைகளுக்குப் பதிலளித்துள்ள இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ், வெனிசுலா தனது இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் என்று கூறியுள்ளார்.

இருப்பினும், அமெரிக்காவுடன் இணைந்து வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றத் தயாராக இருப்பதாகவும், இரு நாடுகளுக்கும் இடையே கண்ணியமான உறவை ஏற்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபை, யாழ்ப்பாணம்

# பொது அறிவித்தல்-2026

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் தொழில் முயற்சியை மேற்கொள்வோர், தொழில் நிறுவனங்கள் ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கீழ்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பில் எமது சபையின் தொடர்புடைய கிளைகளில் அலுவலக நாட்களில் மேலதிக விபரங்களையும் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- 1. மாநகர சபையினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பில் 2025.12.26 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2469 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாகக் கட்டணங்கள் அறவிடப்படும்.

| இல | விடயம் | தொடர்பு பட்டோர் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதன உரிமையாளர்கள் | ஆதன உரிமையை பெற்றுக்கொண்டவர்கள் மாநகரசபையின் ஆதனவரிப்பகுதியில் பெயர்மாற்றப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம் அல்லது jaffnamc2025cendri.org என்ற இணையத்தள முகவரியிலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br>ஆதனவரிப்பகுதியில் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தினை சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு மூலம் பூர்த்தி செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட உறுதிகள், தோம்பு, நிலஅளவைப்படம், விண்ணப்பதாரர்/ விண்ணப்பதாரர்கள் தேசிய அடையாள அட்டைப்பிரதி, ஆதன உரிமையாளர் கையொப்பமிடாத சந்தர்ப்பத்தில் ஆதன உரிமையாளரால் தத்துவ உரிமை கையளிக்கப்பட்டவர் கையொப்பமிடுவதோடு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டு உறுதிப்படுத்திய தத்துவ உரிமைப்பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு ஆதனவரிப்பகுதியை தொலைபேசி மூலமாகவோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.<br>தொலைபேசி இலக்கம்<br>021 021 7697 |
| 02 | ஆதன வரி செலுத்துதல் | மாநகர சபைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு 2026 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகின்றது.<br><br>மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2025 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பு /மதிப்பீட்டை 2026 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலைமதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1)ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனங்களில் நிலங்கள், வதிவிடங்கள் என்பவற்றுக்கு வருடாந்த பெறுமதியில் 8% சதவீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த பெறுமதியில் 10% சதவீதமாகவும் விதிக்கப்படல் வேண்டும் என்றும்,<br><br>மேலும், 2026 ஆம் ஆண்டில் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாணமாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், அட்டவணையின் கீழ் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித்தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% இலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.<br><br>முதலாவது காலாண்டு<br>01.01.2026 - 31.03,2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.01.2026<br><br>இரண்டாவது காலாண்டு<br>01.04.2026 - 30.06.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 30.04.2026<br><br>மூன்றாவது காலாண்டு<br>01.07.2026 - 30.09.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.07.2026<br><br>நான்காவது காலாண்டு<br>01.10.2026 - 31.12.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.10.2026 |
| 03 | வியாபார உரிமம்/ வியாபார வரி | மாநகர சபை எல்லைக்குட் பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2026 ஆம் ஆண்டிற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பித்து வியாபார உரிமம் / வியாபார வரி என்பவற்றை அலுவலகத்தில் 2026.03.31ஆந் திகதிக்குப் பிந்தாமல் படிவ கட்டணத்துடன் உரிய கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2026.03.31ஆந் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடை செய்தல் | மாநகர சபையின் எல்லைக்குள் மீன், இறைச்சி, மரக்கறி வியாபாரம் செய்வோர் | சபையின் பொதுச் சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் சுற்று வட்டத்தினுள் மரக்கறி, தேங்காய். மீன் வகைகள், கோழி இறைச்சி பழ வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | மாநகர சபை எல்லைக் குட்பட்ட சகல வியா பாரம்/தொழில் | 2264/18 ஆம் இலக்க 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானிக்கமைய பாகம் ஈ இல் 1 தொடக்கம் 39 வரையான தொழில்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.<br>1.பத்து அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் மெழுகுவர்த்திகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்<br>2.ஐந்திற்கு குறைவானவர்கள் பற்றிக் (சாயமிடல் ) கைத்தொழில்கள்<br>3.ஐந்திற்கு குறைவானவர்கள் வர்த்தக சலவைக் கூடங்கள்.<br>4.பத்துக்கு மேற்பட்ட நெசவுத்தெறிகள் / இயந்திரங்களைக் கொண்ட பின்னல், பூத்தையல் கைத்தொழில்.<br>5.நாளொன்றிற்கு 200 லீற்றருக்கு குறைவான தேங்காய்எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்.<br>6.வர்த்தகமட்ட தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.<br>7.மதுசாரம் சாராத பானங்கள் உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11 ஆம் பக்கம் பார்க்க...)

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|---|
| | | | 8.உலர் பதனிடல் தொழிற்பாடுகளைக்கொண்ட அரிசி ஆலைகள்.<br>9.அரைக்கும் ஆலைகள்.<br>10.சிகரட்டுக்கள் அல்லது புகையிலை தொடர்பான வேறு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.<br>11.கந்தகத் தூபமூட்டுதலுடன் கறுவா தூப மூட்டும் கைத்தொழில்கள்.<br>12.சமையல் உப்பு பொதியிடும் மற்றும் பதனிடும் கைத்தொழில்கள்.<br>13.தேயிலை கலத்தல் / கலக்குதல் கைத்தொழில்கள்.<br>14.உணவு உற்பத்தி செய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.<br>15.வெதுப்பகங்கள் மற்றும் இனிப்புப் பண்ட தயாரிப்பிடங்கள்.<br>16.முதிர்ச்சியடைந்த பறவைகளுக்குக் குறைந்ததுமான முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்.<br>17.பன்றிப் பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.<br>18.முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.<br>19.கலவன் பண்ணைகள்.<br>20.பழம் அல்லது மரக்கறிகள் அல்லது இறைச்சி அல்லது வேறு உணவு களஞ்சியப்படுத்துகைகள்.<br>21.கொங்கிறீற்று முன்வார்ப்பு கைத்தொழில்கள்.<br>22.சீமெந்துக் குற்றிகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.<br>23.சுண்ணாம்புச் சூளைகள்.<br>24."பரிசுச் சாந்தை" மூலப்பொருளாகப் பயன்படுத்தும் ஏதேனும் கைத்தொழில்.<br>25.சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் / கட்டியாக்கும் கைத்தொழில்கள்.<br>26.கூரையோடு மற்றும் செங்கல் சூளைகள்.<br>27.கண்ணாடிப்பொருட்கள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்.<br>28.கருங்கல் வெட்டும் மெருகேற்றும் கைத்தெழில்கள்.<br>29.வெடிபொருட்களைப் பயன்படுத்தி ஒற்றைத்துளை தகர்ப்புடன் கைவினைசார் சுரங்கந்தோண்டும் செயற்பாடுகள்.<br>30.மர ஆலைகள் மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.<br>31.மரத்தை பருவப்படுத்துவதற்கான கைத்தொழில்கள்.<br>32.தச்சு வேலைத்தளங்கள்.<br>33.ஐந்து அல்லது 10 வேலையாட்களுக்கு குறைவானவர்களுக்குமான உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள்.<br>34.நாளொன்றில் 25 அல்லது 100 ஆட்களுக்கு குறைந்ததுமான விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்.<br>35.கராஜ்கள்.<br>36.கொள்கலச் சாலைகள்.<br>37.அச்சகங்களும் எழுத்து அச்சு இயந்திரங்களும்.<br>38.சடலங்களை நறுமணமூட்டிப் பாதுகாத்தலுடனான பிணவறைகள்.<br>39.இப்பட்டியலின் அட்டவணையின் பாகம் ஈ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடு/கைத்தொழில்கள். |
| 06 | காணி உப பிரிவிடுகை | ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று துண்டுகளாகப் பிரிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| 07 | காணி ஒருங்கிணைத்தல் | ஆதன உரிமையாளர்கள் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனங்கள் இணைக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |
| 08 | படவரைஞராக பதிவு செய்தல்/ புதுப்பித்தல் | படவரைஞர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன் மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதி நடைமுறைக்கமைவாக 2025.11.26 ஆந் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கமைய மாநகர சபையில் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 23 ஆந் திகதிக்கு முன்னர் எமது சபை எல்லைக்குள் படவரைஞராக சேவைகளை வழங்க விரும்பியவர்கள் எமது தலைமை அலுவலகத்தில் பதிவினை மேற்கொண்டிருத்தல் அல்லது புதுப்பித்து இருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாதோரினால் அல்லது புதுப்பிக்காதோரினால் வரையப்படும் படங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வித்தகைமை Drafting Technology Civil Level - 5 இருத்தல் வேண்டும். |
| 09 | துவிச்சக்கரவண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | 2026ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் (நாய்களுக்கானது) என்பன 31.03.2026ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் படிவ கட்டணத்துடன் உரிய கட்டணங்களை செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 10 | விளம்பரங்களை அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் | மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உருவாக்கப்பட்ட 1952/14 ஆம் இலக்க 2016 ஆம் ஆண்டு மாசி மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானியின் நியமத்துணை விதியின் பிரகாரம் மாநகர சபை எல்லைக்குள் பதாதைகள், விளம்பரங்களை நிறுவும் அல்லது காட்சிப்படுத்தும் விளம்பர நிறுவனங்கள். அல்லது வேறு நபர்கள் சபையின் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தல் வேண்டும். மேலும் காட்சிப்படுத்தல்களை, முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் ,கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் ஆகியவற்றிற்கான கட்டணத்தை 2026.03.31ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் புதுப்பித்தல் அனுமதியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br>இவ்விடயம் உரிய விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். யாருக்கும் ஆபத்தில்லாத வகையில் விளம்பரப்பலகை பொருத்தப்படல் வேண்டும் ஏதாவது சந்தர்ப்பத்தில் விளம்பரப்பலகையால் ஒருவருக்கு அல்லது சொத்துக்கு நட்டம் ஏற்படும் பட்சத்தில் விளம்பர உரிமையாளரால் ஈடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் வேறு எந்த அறிவித்தலுமின்றி உரிய இடத்திலிருந்து 2026.03.31ஆந் திகதிக்குப் பின்னர் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 11 | திண்மக் கழிவுகள் தொடர்பாக குடியிருப்பாளர்கள், வியாபார நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை. | மாநகர சபை எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளர்கள், வியாபார நிலைய உரிமையாளர்கள், அரச, தனியார் நிறுவனங்கள். | 1. ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவை பொதுச்சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.<br>2. வீட்டுகழிவு (குசினி) கழிவுக்களை வாரத்தில் ஆகக்குறைந்தது 02 தடவை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை உறுதிப் படுத்துவதற்காக குடியிருப்பாளர்களிற்கு திண்மக்கழிவகற்றல் பதிவு அட்டை வழங்கப்பட்டுள்ளது. வீட்டுக்கழிவு (குசினி) தரம்பிரித்து வழங்கப்படல் வேண்டும். இச்சேவை முற்றிலும் இலவசமானது. எக் காரணம் கொண்டும் தரம்பிரியாத கழிவுகள் சேகரிக்கப்பட மாட்டாது. தரம் பிரியாது கழிவுகளை வீதியோரங்களில் வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>3. தாங்கள் வீடுகளில் சேரும் மேலதிக திண்மக்கழிவுகளை உரியமுறையில் தரம் பிரித்து மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு மாநகரசபையின் கட்டண கழிவகற்றல் வாகனத்தில் அதற்கான கட்டணத்தினை அவ்விடத்தில் செலுத்தி கழிவுகளை அகற்றிக் கொள்ளமுடியும். அதற்கான உபபற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.<br>4. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மற்றும் தனியார் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள, ஏனைய தொழில்முறை நிறுவனங்கள், முடிதிருத்தும் நிலையங்கள் என்பன தங்கள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உரிய கழிவகற்றல் கட்டணங்களை மாதாந்த அடிப்படையில் அல்லது தடவைகளிற்கான அடிப்படையில் மாநகரசபையில் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை காண்பித்து கிரமமான முறையில் கழிவகற்றல் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும். சபையினது குறித்த கழிவகற்றல் முறைக்கு ஒத்துழைக்காது கழிவகற்றலினை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>5. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச்செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.<br>6. பொது இடங்களில், வீதிகளில் கழிவுகளை கொட்டுவோரை கண்காணிப்பதற்காக எமது சபை ஊழியர்கள் இரவு பகலாக கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அத்துடன் CCTV camera வும் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இனம் காணப்படுவோர்மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>7. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு கழிவகற்றல் வாகனம் ஒழுங்குபடுத்தப்பட்டு ஒரு குறிப்பிட்ட வீதிக்கு வாரம் ஒன்றிற்கு ஆகக் குறைந்தது 03 தடவைகள் கழிவகற்றல் வாகனமானது கழிவுகளை சேகரிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.<br>8. திரவக் கழிவகற்றல் சேவையினை மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு சபை வாகனங்கள் மற்றும் சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட வாகனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். |
| 12. | முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடம் | மாநகரசபை எல்லைக்குள் முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடங்களிலிருந்து முச்சக்கரவண்டி, கார் சேவை வழங்குவோர் | மாகாண சபையினால் 2016.02.02ஆம் திகதி வெளியிடப்பட்ட 1952/14ஆம் இலக்க இலங்கை சனநாயகக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகளின் அத்தியாயம் 04 பிரிவு 11 இன் பிரகாரம் மாநகரசபை எல்லைக்குள் காணப்படும் முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவ்வாறு சபையின் கீழ் உள்ள தரிப்பிடங்களில் மட்டுமே முச்சக்கரவண்டி, கார் நிறுத்தி சேவையிலீடுபட முடியும் என்பதோடு குறித்த தரிப்பிடத்திற்கு நாளாந்த கட்டணமாக ரூபா 50/= இனை எமது அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபடமுடியாது என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12 ஆம் பக்கம் பார்க்க...)

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|---|
| 13 | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குவோர் | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்திற்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மாநகர சபையில் முறைப்படி அனுமதியினைப் பெற்ற பின்பே தமது சேவையினை ஆரம்பித்தல் வேண்டும். |
| 14 | நீர்வழங்கல் சேவை | நீர்வழங்கல் சேவை தேவைப்பாடுடையோர் | 1.நீர்வழங்கல் சேவை<br>பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைக்கு மாநகர சபையுடன் தொடர்புகொண்டு கட்டணம் செலுத்துவதன்மூலம் குடிநீரையும், வாடகைக்கு தண்ணீர் தாங்கியினையும் பெற்றுக்கொள்ளமுடியும். |
| 15 | பொதுசுகாதாரம் பேணல் | ஆதன உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | 1.சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் காணப்படும் பொதுசுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொதுசுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுடன், டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள், பொருட்களை காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>2.உணவு குடிபானம் போன்றவை கையாளும் இடங்கள் அல்லது உற்பத்தி மற்றும் விற்பனை செய்யுமிடங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு திருப்திகர அறிக்கையின் அடிப்படையிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும்.<br>3.20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனையானது 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 16 | கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது | கால்நடைகள்/ நாய்கள் வளர்ப்போர் | சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக விலங்குகள் நடமாடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி மாநகர சபையால் பிடிக்கப்படும். பின்னர் அவை உரிய காலத்தினுள் உரிமை கோரும் பட்சத்தில் பிடிகூலி தண்டம் மற்றும் பராமரிப்புச்செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். |
| 17 | வீதி ஒழுங்கு முறைகளை பேணல் | ஆதன உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | சபை எல்லைக்குள் வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக மரங்கள் மற்றும் பூக்கன்றுகள் நாட்டுதல்/வளர்க்கப்படுதல், கொங்கிறீற்றிலான கட்டுமானம் கட்டுதல், இருக்கைகள் அமைத்தல், இளைப்பாறல் மடங்கள் கட்டுதல், நடைபாதை வியாபாரம் செய்தல் என்பன பொதுமக்களிற்கு இடையூறாகவும், பொதுஒழுங்கு-சீர்குலைவுக்கும் காரணமாக காணப்பட்டால் அவை தடைசெய்யப்படும் என்பதுடன் வளவிலிருந்து வீதியை நோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகளை உடனடியாக அகற்றுதல் வேண்டும். சபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தரப்படுகின்றது, மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக்கொள்வதும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 18 | பொதுமயானங்களின் பயன்பாடு | மயானங்களை பயன்படுத்துவோர் | 1.கோம்பயன் மணல் இந்து மயானத்தில் உடலங்களை எரித்தல்/ புதைத்தல் செயற்பாடுகள் மாநகர சபையில் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br>2.கட்டணத்தை செலுத்துவதற்கு அலுவலக வேலை நாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை நானாவித இறைவரிப்பகுதியிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பாதுகாவலர் பகுதியினூடாகவும் செலுத்தப் படலாம்.<br>3.அனுமதிக்காக மேற்குறிப்பட்ட இடங்களில் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இறப்பு தொடர்பான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 19 | கழிவு நீர் | ஆதன உரிமையாளர்கள் / வர்த்தகர்கள் | பகிரங்க வெள்ள வடிகால்களில் வீட்டுக் கழிவு நீர் வியாபார நிறுவனங்களின் கழிவு நீர் சேகரிக்கப்படல் சட்டவிரோதமானதாகும். அவ்வாறு செயற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20 | சிகிச்சா நிலையம் | தாய், சேய் | • கர்ப்பவதிகள் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• பிரசவ பின் தாய்மார்களுக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• குழந்தைகள் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• குடும்பத்திட்ட சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• புதிய திருமண தம்பதியருக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• சுகவனிதையர் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• இளவயதினருக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• போசாக்கு சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• பாடசாலை தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு<br>• விசேட தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு |
| 21 | வெளிக்கள செயற்பாடு | மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது மக்கள் | • வீட்டுத் தரிசிப்பு ( சனத்தொகை கணக்கெடுப்பு, கற்பவதிகள், பிரசவ பின் தாய்மார்கள், குழந்தைகள், முன்பள்ளி சிறார்கள், யௌவன பருவத்தினர், குடும்பத்திட்டம் அனுசரிப்போர், புதிய திருமணத் தம்பதியினர் )<br>• சுகாதார கல்வி செயற்பாடுகள்<br>• தொற்றுநோய், தொற்றாநோய் தடுப்பு செயற்பாடுகள்<br>• கள நிறைபார்க்கும் மையங்களை நடாத்துதல்<br>• முன்பள்ளி தரிசிப்புகள்<br>• தாய்மார் கழகங்களை வழி நடாத்துதல்<br>• உள்ளூர் கலந்துரையாடல்கள் பங்கேற்றல் |
| 22 | பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வழங்கப்படும் சேவைகள் | மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது மக்கள | • தொற்று நோய் கட்டுப்பாடு<br>• தொற்றா நோய் கட்டுப்பாடு<br>• நீர் சுகாதாரம்<br>• விலங்கு விசர் நோய் தடுப்பு<br>• உணவு சுகாதாரம்<br>• மருத்துவ நிலையங்களின் சுகாதார செயற்பாடுகள்<br>• தொழிற்சுகாதார மேம்பாடு<br>• பொதுச் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை<br>• திருவிழா சுகாதார மேற்பார்வை |
| 23 | Gov pay இணையவழி ஊடான கொடுப்பனவு | மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச , தனியார் நிறுவனங்கள் | மாநகர சபைக்கான கட்டணங்களான ஆதன வரி, பதிவு செய்தல் மற்றும் பரிசோதனைக் கட்டணங்கள் - ஆதனம், வியாபார வரி, வியாபார உரிமம், உயர் தொழில் மீதான உரிமம், களியாட்ட வரி, வணிக ஸ்தலங்களுக்கான வாடகை, இறைச்சிக்கடை வாடகை, வாடகை (வீதி உருளை, மண்டபம், அரங்கு), இறைச்சிக்கடை குத்தகை, சந்தைக் குத்தகை, நல்லூர் திருவிழா குத்தகை, தண்ணீர் கட்டணங்கள், விளம்பரக் கட்டணங்கள், இந்துமயான கட்டணங்கள், கழிவகற்றல் கட்டணங்கள், பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் கட்டட விண்ணப்பங்கள், வாகன நிறுத்தல் கட்டணங்கள், படிவக் கட்டணங்கள், தண்டப்பணங்கள் என்பவற்றை பிரபலமான நிதி தொழிநுட்ப பயன்பாடுகள் மற்றும் இணைய வழி (Online) வங்கித் தளங்கள் மூலம் Govpay இணைய வழியூடாக எளிதில் செலுத்தி கொள்ள முடியும். மேலதிக தகவல்களை www.govpay.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிட முடியும். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் சகல பொது மக்களும் மிகவும் கவனமெடுத்து செயற்படுமாறும், குறித்த அறிவித்தல்களை பின்பற்றத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**முதல்வர்,மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-4765)

# அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தினமும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதய நாளும் பரிசுத்தினமும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.45 மணி அளவில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக செல்லா மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி தனுஜா லுக்ஷாந்தன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். சிறப்பு அதிதிகளாக யாழ் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனா தேவி சிறிரங்கன், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கெங்காதரன் இந்திர மோகன். சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சிவானந்தன் நந்தகுமார் இணுவில் கட்டட ஒப்பந்தக் காரர் லயன் திருச்செல்வம் சங்கர், லண்டன் தமிழ் அநாதைகள் அறக்கட் டளை சோமசுந்தரம் இந்திர குமார் ஆகியோரும் கௌரவ அதிதியாக தெல்லிப் பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம் எண்ணங்களே நம்மைச் செதுக்கும் உளிகள்.
*- சீனிவாசன் தாமோதரன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தண்டம் விதிப்பது மட்டுமா போக்குவரத்துப் பொலிஸாரின் கடமை

வாகன நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணம் மூச்சுவிட முடியாமல் திண்டாடுகிறது.

அதிலும் பாடசாலை மாணவர்கள் பயணிக்கின்ற நேரங்களிலும் மாலைப் பொழுதிலும் யாழ்ப்பாணம் படுகின்ற அல்லோலகல்லோலம் சொல்லிமாளா.

அதேவேளை நாளாந்தம் மோட்டார் சைக்கிள்கள் உட்பட புதிய புதிய வாகனங்கள் யாழப்பாணத்துக்கு வந்தவண்ணமுள்ளன.

ஆக, வீதிகளின் ஒடுக்கம் - யாழ்ப்பாண நகரத்தின் பொருத்தமற்ற கட்டமைப்பு - வாகனங்களின் பெருக்கம் - வீதிகளை ஆக்கிரமிக்கின்ற வாகனத் தரிப்பிடங்கள் என்பன காரணமாக யாழ்ப்பாணத்தில் நடமாடுவது முடியாதென்றாயிற்று.

இதற்கும் அப்பால், யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்ற வர்த்தக நிலையங்கள், அவற்றை நாடி வருகின்ற பொதுமக்கள், எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளும் வருகின்ற நோயாளர்கள், பார்வையாளர்கள் அவர்களின் வாகனங்கள் மற்றும் யாழ்.நகரைச் சுற்றிச் சூழ்ந்துள்ள வங்கிகள் என எல்லாமும் சேர்ந்து யாழ்ப்பாணத்தை திண்டாட வைத்துள்ளது.

இதுபற்றி யாழ்.மாநகர சபை மற்றும் நகர அதிகார சபை என்பன கூடி ஆராய்ந்து சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இல்லையேல் யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் ஏற்படுகின்ற விபத்துக்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் 24ஆம் விடுதியை நிறைத்துக் கொண்டே இருக்கும்.

இஃது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தில் இத்துணை தூரம் போக்குவரத்து நெருக்கடிகள் இருக்கின்ற போதிலும் அது தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல், தனித்து தண்டம் விதிப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

அதிலும் மறைந்து நின்று ஏதோ திருடர்களைப் பிடிப்பதுபோல அலமலக்காக வாகனங்களை இடைமறிக்கின்ற பொலிஸாரின் செயல் எந்தவகையிலும் நியாயமானதல்ல.

ஆம், யாழ்ப்பாணத்தில் இலஞ்சம் என்ற பெயரால் போக்குவரத்துப் பொலிஸார் ஈட்டிய வருமானம் கணக்கெடுக்கப்படுமாயின், சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் வருமான வரி செலுத்தும் தகைமைக்கு உட்பட்டவர்களாக இருப்பர்.

இதன் காரணமாகவே இன்னமும் போக்குவரத்துப் பொலிஸார் இருட்டிலும் மரங்களிலும் மறைந்து நின்று வாகனங்களை இடைமறிக்கின்றனர்.

பரவாயில்லை. அதுவும் அவர்களின் கடமை என்றால், போக்குவரத்து நெருக்கடியுள்ள வீதிகளில் - சந்திகளில் நின்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்ற பணியை யாழ்ப்பாணத்துப் போக்குவரத்துப் பொலிஸார் எங்கேனும் செய்கிறார்களா? என்றால் இல்லவே இல்லை.

அதேநேரம் இதுபற்றி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கதைப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளின் தெருச்சண்டை நேரம் ஒதுக்குவதாகவும் இல்லை.

ஆகவே, இதுகுறித்து வடக்கின் ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

### நாட்டுக்காக உயிரைப் பணயம் வைத்து

# உழைக்கும் மீனவர்களின் பாதுகாப்பும் நலனும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

*(கொழும்பு)*

நாட்டின் வருமானத்துக்காகவும் மக்களின் ஊட்டச்சத்துக்காகவும் உயிரைப்பணயம்வைத்து உழைக்கும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற விவாதங்கள் நடந்து வரும் சூழலில் உண்மையாக உழைக்கும் மீனவர்களுக்கு முறையான ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டியதே அவசியமென கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட இரண்டு முக்கிய ஒழுங்குவிதிகள் மற்றும் மீனவர்களின் நலன்கள் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று (06) ஆற்றிய உரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள் பல தோல்வியடைந்துள்ளன அல்லது செயலற்றுப் போயுள்ளன. எனவே மீனவர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஒரு வலுவான ஓய்வூதிய முறையை விரைவாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது மீனவர்கள் வயதான காலத்தில் வறுமையின்றி வாழவும் இளைஞர்களை இந்தத் தொழிலில் ஈர்க்கவும் இந்தத் திட்டம் உதவும்.

ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் உணவுகளை ஏற்றுமதி செய்யும் போது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடுமையான ஒழுங்குவிதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இலங்கைக்கு வந்து நேரடியாகப் படகுகளை ஆய்வு செய்தனர். அங்கு சட்டவிரோத வலைகள் அல்லது தடைசெய்யப்பட்ட முறைகள் பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டால் அந்த நாட்டுக்கு மீன் ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்படலாம். இவ்வாறான இக்கட்டான சூழலில் அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் கடுமையாக உழைத்து அந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்தினர்.

தடை செய்யப்பட்ட வலைகள் அல்லது சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்திப் பிடிக்கப்படும் மீன்கள் ஏற்றுமதிக்கு நிராகரிக்கப்படுகின்றன. கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆய்வுகளின் போது இவ்வாறான தடைகள் ஏற்படாமல் அமைச்சின் அதிகாரிகள் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றார். *(ம-7)*

# கல்வி அமைச்சர் பதவியிலிருந்து பிரதமர் உடன் விலக வேண்டும்

## கம்மன்பில போர்க்கொடி

தரம் 6 பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது கல்வி அமைச்சுப் பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

புதிய கல்விக் கொள்கையை அமுல்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் நாட்டின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு எதிராகச் செயற்படுகிறது. ஆறாம் தரப் பாடப்புத்தகத்தில் சர்ச்சைக்குரிய வகையில் இணைக்கப்பட்டிருந்த வலைத்தளத்தின் முகவரி தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.

வெளிநாடுகளில் ரயில் விபத்துக்குள்ளானாலே போக்குவரத்து அமைச்சர் பதவி விலகுவார். ஆனால் இலங்கையில் அவ்வாறான பழக்கம் கிடையாது. பாடசாலைப் புத்தகத்தில் இவ்வாறான பாரதூரமான தவறு இடம்பெற்றுள்ள நிலையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சுப் பதவியைத் துறக்கவில்லை.

மாறாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி விலகியுள்ளார்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் வெளிவந்ததன் பின்னர் அரச அதிகாரிகள் மீது பழி சுமத்துவதும் அவர்களைப் பதவி விலக்குவதும் தற்போது புதிய பழக்கமாகிவிட்டது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சராகப் பதவி வகிக்கும் வரையில் இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறுமா? என்பது சந்தேகத்துக்கிடமானது. ஆகவே பிரதமர் கல்வி அமைச்சு பதவியில் இருந்து உடன் விலக வேண்டும் என்றார். *(ம-7)*

# அடம்பன் - ஆண்டாங்குளம் வீதியில் வாகன விபத்து

### ஒருவர் காயம்

*(மாந்தை)*

மன்னார் அடம்பன்- ஆண்டாங்குளம் பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (6) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடைகளுக்கு விநியோகிப்பதற்காக வாழைக்குலைகளை ஏற்றி வந்த கெப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மரத்துடன் மோதி பின்னர் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது குறித்த கெப் ரக வாகனத்தைச் செலுத்தி வந்தவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் கெப் ரக வாகனம் சேதமடைந்துள்ளதோடு, மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ம-7,285)*

# வாகரைப் பிரதேசத்தில் வெடிபொருட்கள் மீட்பு

*(மட்டக்களப்பு)*

மட்டக்களப்பு -வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பந்தனாவெளி - சம்பு களப்பு வயல் பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருட்களை வாகரை விசேட அதிரடிப் படையினர் நேற்று (06) மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பிரதேசத்தில் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்தவர் வயலை சுற்றி எல்லை வேலி அமைப்பதற்காகத் தோண்டும் போது மர்மப் பொருட்கள் தென்படுவதனை அவதானித்து வாகரை விசேட அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.


அதனைத் தொடர்ந்து அதிரடிப் படையினர் அந்த இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வெடிபொருட்கள் உள்ளதை உறுதிப்படுத்திய பின்னர் வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

நீதிமன்ற அனுமதியையடுத்து மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கையின் போது 38 ஆர்பிஜி குண்டுகள், 38 சார்ஜர்கள் மற்றும் ஐந்து கைக் குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## நீண்டநாள் கனவுகள் நிறைவேறும்!



**தெய்வ நம்பிக்கையில் சிறந்த தனுசு இராசியினரே... தன்னம்பிக்கை நிறைந்த தனுசு இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும் ஆண்டாக அமைய நல்வாழ்த்துக்கள்.**

எந்த சூழ்நிலையும் உங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் கூடும். நீண்ட நாள் ஆசைகள், கனவுகள் நிறைவேறும். ஒழுக்கமே உயர்த்தும் என்பதை உணர்ந்து செயற்படுவீர்கள். எண்ணங்களும் லட்சியங்களும் செயல் வடிவம் பெறும். நிம்மதியாக சுதந்திரமாக செயல்படுவீர்கள்.

**குருவின் சஞ்சார பலன்கள்**

மே மாதம் வரை சம சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் ஜூன் மாதம் 2 ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானத்திற்கு செல்கிறார். விழிப்புடன் செயல்பட வேண்டிய வருடம். அர்த்தாஷ்டம சனி மற்றும் அஷ்டம குருவின் தாக்கம் இருப்பதால் தேவையற்ற அலைச்சலும் மன உளைச்சலும் வரலாம். சொத்துக்கள் வாங்கும் மற்றும் விற்கும் விடயத்தில் கவனம் தேவை.

பாகப்பிரிவினை தொடர்பான விடயங்களில் அவசரப்படக் கூடாது. குடும்பத்தில் சுப விசேடங்கள் நடக்கும். புத்திர பாக்கியத்தில் நிலவிய தடைகள் அகலும். இடப்பெயர்ச்சி, வீடு மாற்றம், நாடு மாற்றம், ஊர் மாற்றம், வேலை மாற்றம் வரலாம். பெரிய மனிதர்களின் தொடர்பால் சமுதாய அங்கீகாரம் கூடும். மாணவர்கள் சிந்தனையை ஒரு நிலைப்படுத் தினால் வளமான எதிர்காலம் உண்டு. **ஆரோக்கியத்தை அதிக ரிக்கும் உணவுகளை சாப்பிடுவது நல்லது.**

பெண்களுக்கு தந்தை வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். மிகப் பெரிய அரசியல் தலைவர்களின் நட்பு கிடைக்கும். தாய் மாமா அல்லது தாய்வழி தாத்தா மூலம் நிதி உதவி கிடைக்கலாம். தொழிலில் சிறிய முயற்சியில் பெரிய லாபம் கிடைக்கும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உள்ளது. தடை பட்ட சொத்து விற்பனை சாதகமாகும். உயர் கல்வி முயற்சிக்கு சாதகமான சூழல் உண்டாகும். சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கு தகுந்த வருமானமும் அதிகரிக்கும்.

**சனியின் சஞ்சார பலன்கள்**

ஆண்டு முழுவதும் தனுசு இராசிக்கு 4 ஆம் இடமான சுகஸ்தானத்தில் சனிபகவான் சஞ்சரிக்கிறார். பொருளாதார ரீதியாக சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சீராகும். உயில் சொத்து, பணம், பங்குச் சந்தை ஆதாயம் போன்ற மறைமுக வகையில் பொருளாதாரம் கிடைக்கும். விரயம், வைத்திய செலவு, காரியத் தடை முற்றிலும் நீங்கும். ஜூன் மாதத்தில் குரு பார்வை சனி பகவானுக்கு கிடைக்கும் பட்சத்தில் சம்பந்தம் இல்லாத குற்றத்தில் சிக்கி யவர்கள் வம்பு, வழக்கிலிருந்து முழுமையாக விடுபடுவார்கள். சொத் துக்களின் மதிப்பு உயரும். பல தலைமுறையாக விற்காமல் கிடந்த குடும்ப சொத்துக்கள் விற்று விடும். பிரிந்து வாழ்ந்த குடும்ப உறவுகள் இணைந்து வாழும் யோகமும் ஒற்று மையும் உண்டாகும்.

கடனால் கவலை, கணவன் மனைவி பிரிவினை அல்லது வழக்கு பிரச்சினைகள் முற்றிலும் நீங்கும். சிலருக்கு புதிய மனை, வீடு வாங்கும் வாய்ப்பு கிடைக்கும். வருமான வரிக் கணக்கை முறையாக வைத்துக் கொள்வது அவசியம். உயிருக்கு ஆபத்தை தரும் நோய்களுக்கு சிகிச்சை செய்பவர்களுக்கு நோயிலிருந்து முழு நிவாரணம் கிடைக்கும். திடீர் அதிஷ்டம், உயில் சொத்து ,எதிர்பாராத தன வரவு கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபிட்சமும் அதிகரிக்கும்.

**ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்**

ஆண்டின் தொடக்கத்தில் 3 ஆம் இடமான வெற்றி ஸ்தானத்தில் ராகு பகவானும் 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் கேது பகவானும் சஞ் சரிப்பார்கள். டிசம்பர் 5, 2026 முதல் ராகு பகவான் தனம் வாக்கு குடும்ப ஸ்தானத்திலும் கேது பகவான் 8 ஆம் இடமான அஷ்டம ஸ்தானத்திலும் சஞ்சரிப்பார்கள். ஆற்றலுக்கும், திறமைக்கும் பெருமை சேர்க்கும் சம்பவங்கள் நடக்கும்.

ஊர் மாற்றம், வேலை மாற்றம், வீடு மாற்றம், பள்ளி மாற்றம் என அவரவர் வயதிற்கேற்ற மாற்றம் உண்டாகும். பண வரவு பல வழிகளில் பன் மடங்காக அதிகரிக்கும். தனம், தானியம், புகழ், செல்வாக்கு, வீரம், அறிவு இவற்றுடன் அஷ்ட ஐஸ்வரியமும் கிடைக்கும். மனோ பலம், தேகபலம், பணபலம் ஆகிய மூன்றும் குடிபுகும்.

புதிய தொழிலுக்கு எடுக்கும் முயற்சிகள் நல்ல மாற்றத்தை தரும். முதலாளி, தொழிலாளிகளிடம் கருத்து ஒற்றுமை மேலோங்கும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு உண்டு. சிலருக்கு மிகப் பெரிய கட்சியில் இணையும் வாய்ப்பு கிட்டலாம். மூட்டு வலி, வயிறு சார்ந்த உபாதைகள் தீரும். பூர்வீக சொத்து தொடர்பான நல்ல தகவல்கள் கிடைக்கும். தந்தை வழி உறவுகளுடன் ஒற்றுமை மேலோங்கும். பெண்களுக்கு நீண்ட காலமாக எதிர்பார்த்த தாய் வழி சீதனம் தேடி வரும்.

**மூலம்**

நடப்பவையெல்லாம் நல்லதாகவே நடக்கும் வருடம். இதுவரை இருந்த பயம் அகலும்.வேலையில் நல்ல சம்பளத்துடன் கூடிய இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அதே நேரம் வேலையில் கடினமாக உழைக்க நேரும். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். தொழிலில் முதலீட்டை அதிகப்படுத்த உகந்த காலம். வராக்கடன்கள் வசூலாகும்.




பெண்களுக்கு விலை உயர்ந்த ஆடை ஆபரண சேர்க்கையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். திருமண முயற்சிகள் சித்திக்கும். கடன் தொல்லைகள் அகலும். உழைப்பிற்கான நல்ல பலன் கிடைக்கும். தாயார் உடல்நிலையில் ஏற்பட்ட பிரச்சினைகள் சீராகும். வெளிநாடு சென்றவர்கள் சொந்த மண்ணிற்கு திரும்பும் சந்தர்ப்பம் உருவாகும்.

நீண்ட கால பரம்பரை நோய்க்கு மாற்று மருத்துவத்தின் மூலம் தீர்வு காண முயல்வீர்கள். உயில் எழுத ஏற்ற காலம். வேலை பளு மற்றும் அலைச்சல் சற்று அதிகமாக இருக்கும். அரசுக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டு அரசுக்கு அபராதம் கட்டும் சூழல் ஏற்படும் என்பதால் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்ட தடைகள் தாமதங்கள் அகலும். பிரதோஷ வழிபாடு செய்யவும்.

**பூராடம்**

சங்கடங்கள் நீங்கி வாழ்வில் வளம் பெறும் வருடம்.மே மாதம் வரை இராசிக்கு குரு மற்றும் சனியின் பார்வையிருப்பதால் எதிர்மறை எண்ணங்கள் நீங்கி மனதில் தன்னம்பிக்கை ஏற்படும்.கடந்த காலத்தில் நிலவிய தடைகள் நீங்கும்.புதிய வேலைக்காக எடுக்கும் முயற்சியில் வெற்றி உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சொந்த தொழில் பற்றிய எண்ணம் அதிகமாகும். சிலருக்கு உத்தியோக மாற்ற சிந்தனை அதிகரிக்கும்.பெரிய பதவிகளும் கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறும் உள்ளது.

சிலர் முன்னோர்கள் கடைபிடித்த கொள்கைகளிலிருந்து மாறுபட்டு செயல்பட நேரும். பெண்கள் அழகு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வார்கள். வாடகை வீட்டில் குடியிருந்தவர்கள் சொந்த வீடு வாங்கி குடியேறும் காலம். புதிய சொத்து வாங்கும் போது முக்கிய ஆவணங்களை சரிபார்க்கவும். மாணவர்கள் விளையாட்டை தவிர்த்து எதிர்காலத்திற்கு திட்டமிட்டு படிப்பது அவசியம். எதிர்பாராத சில செலவுகள் வரலாம். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய பய உணர்வு இருந்து கொண்டே இருக்கும். தம்பதிகள் ஒருவரையொருவர் புரிந்து செயல்படுவதால் மன ஒற்றுமை அதிகரிக்கும்.ஆஞ்சநேயரை வழிபடவும்.

**உத்திராடம் 1**

பொருளாதார தேவைகள் நிறைவு பெறும். நீண்ட நாட்களாக தீர்க்க முடியாத அலைக்கழித்த சட்டம் தொடர்பான பிரச்சினைகள் முடிவிற்கு வரும்.தந்தையுடன் ஏற்பட்ட பிணக்குகள் சீராகும். அர்த்தாஷ்டம சனியின் காலம் என்பதால் பூமி வாங்கும் விடயத்தில் சிந்தித்து நிதானமாக செயல்படுவது சிறப்பு. புதியதாக வாங்கிய சொத்தின் பத்திரப் பதிவு தள்ளிப்போகும். பணம் சம்பாதிக்க கடுமையாக உழைப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு கட்சியில் செல்வாக்கு குறைவது போல் மனம் வேதனை அடையும். வீண் அவமானம் மறைமுக எதிர்ப்பு ஏற்படும். நெருக்கமானவர்களே உங்களுக்கு எதிராக திரும்பும் வாய்ப்பு இருப்பதால் கவனமாக இருக்க வேண்டும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திருமண முயற்சி பலித மாகும். சிலருக்கு காதல் திருமணம் நடக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. தகுதியும் திறமையும் நிறைந்த புதிய தொழில் பங்குதாரர் கிடைப்பார்கள். பிறரின் விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. விலகிச் சென்ற உறவுகள் மீண்டும் இணைவார்கள். மூத்த சகோதரர், தந்தை பக்க பலமாக இருந்து உதவுவார். பெரிய பொருள் உதவிகள் கிடைக்கும். சுவாமி ஐயப்பனை வழிபடவும்.

**பரிகாரம்:** வியாழக்கிழமை மாலை லட்சுமி குபேரர் வழிபாடு செய்வதால் செல்வ வளம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

மோட்டார் சைக்கிளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படை மற்றும் யாழ். பொலிஸ் விசேட அதிரடிப்படையுடன் இணைந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை (5) மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஓட்டமாவடி, சங்கானை, நல்லூர் மற்றும் கொய்யாத்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த 22 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், போதை மாத்திரைகள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## பாம்புக்கடிக்கு...

கத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சிறிகாந்தன் கிருசிகன் (வயது-23) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் பாம்புக்கடிக்கு இலக்காகிய நிலையில் தருமபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற பொழுது இளைஞன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## கட்டுத் துவக்கு...

மிருகங்களை வேட்டையாடுவதற்காக பொருத்தப்பட்டிருந்த கட்டுத்துவக்கில் சிக்கியே படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் உடனடியாகப் பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## மாகாண சபைத்...

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய மாகாண சபைத் தேர்தல்களை எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்பது குறித்து இந்தத் தெரிவுக்குழு ஆராயவுள்ளது.

அதன்பின்னர் இது தொடர்பான தனது முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என அந்தக் குழுவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## புத்தளத்தில்...

வர் மாரவில ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் சட்டவிரோத மதுபானம் அருந்தியமையாலேயே உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழப்புக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய சடலங்கள் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை இவர்கள் கசிப்பு அருந்தியுள்ளதாகவும் அதனை விநியோகித்த 70 வயது பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## இரு மாதங்...

மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

டித்வா சூறாவளியினால் இடம்பெயர்ந்த சிலரை அரசாங்கம் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருப்பதால் இது அவசியம் என்று அவர் கூறினார்.

மேலும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒப்புதல் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## போதையை...

“முழு நாடுமே ஒன்றாக” தேசிய செயற்பாட்டு சபையின் மூன்றாவது அமர்வு, மூன்று நிகாயாக்களின் மகா சங்கத்தினர் உள்ளிட்ட மதத் தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றபோதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நாடு முழுவதும் போதைப்பொருள் விநியோகத்தை ஒழித்தல், சோதனை நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல், இதற்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல், போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிராகச் சமூகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பன்முக அணுகுமுறையின் மூலம் நாட்டில் பரவலாக உள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கத்துடன் “போதைப்பொருள் அற்ற நாடு-மகிழ்ச்சியான நாளை” என்ற தொனிப்பொருளின் கீழ் “அகன்று செல்-முழு நாடுமே ஒன்றாக” தேசிய செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு எதிராக பாரிய சமூகத் தாக்கத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தவும் போதைப்பொருள் பயன்படுத்துபவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் அரசாங்கம், பாதுகாப்புப் பிரிவுகள், சிவில் அமைப்புகள் மற்றும் அனைத்து பிரஜைகளையும் ஒன்றிணைத்து ஒரு தேசிய முன்னணியாக இது செயற்படுகிறது.

போதைப்பொருள் தொடர்பாக தற்போது இடம்பெறும் சோதனை நடவடிக்கைகள், கைதுகள் மற்றும் புனர்வாழ்வு செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

2025.01.01 முதல் 2026.01.05 வரையிலான காலப்பகுதியில் 1,821.174kg ஹெரோயின், 3,865.710kg ஐஸ், 17,189.377kg கஞ்சா, 38.958 kg கொக்கேயின் மற்றும் 4,049,569 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது. (ம-7)













































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதை கட்டுநாயக்கவில் மீட்பு



(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 50 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் தொகை நேற்று (06) கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை விமான நிலையத்தின் வருகை முனையத்தில் பசுமை வழி ஊடாகத் தப்பிச் செல்ல முயன்ற மூன்று வெளிநாட்டுப்பயணிகளுடன் இந்தப் போதைப்பொருள் தொகையை சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த இரண்டு பெண்களும் ஒரு ஆணுமாவர். 27 வயதான ஆண் மும்பையில் உள்ள தொலைபேசி பரிமாற்ற நிலையமொன்றில் பணிபுரிபவர் என்றும் 25 மற்றும் 31 வயதுடைய மற்றைய இரு பெண்களும் மும்பையில் பணிபுரியும் பாடசாலை ஆசிரியைகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

# மிளகு, கோப்பி, ஏலக்காய் விவசாயிகளுக்கு நிவாரணம்

(கொழும்பு)

பேரிடரால் பாதிக்கப்பட்ட மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் தோட்டங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

திடீர் பேரிடர் சூழ்நிலையால் சேதமடைந்த குறுகிய கால பயிர்களுக்காக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான வரவு செலவு சுற்றறிக்கைகள் எண்கள் 08/2025 மற்றும் 08/2025 (i) இல் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, பேரிடரால் சேதமடைந்த மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் தோட்டங்களை மீண்டும் பயிரிடுவதற்காக அந்தத் தோட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 425,000 உதவித் தொகை வழங்கவும் ஏற்றுமதி விவசாயத் துறையின் திட்டங்கள் மூலம் அந்தத் தோட்டங்களில் மீண்டும் பயிரிடுவதற்கும் இலவச மரக்கன்றுகளை வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*


SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
ENRICH YOUR LIFE AT SLIIT NORTHERN UNI
OPEN DAY 2026
JANUARY 10 | 10 AM ONWARDS ON-CAMPUS
(C-4766)
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807
northernuni.lk admissions@northernuni.com



## மணப்பெண் தேவை

01. பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30529)
02. கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03. அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42381)
04. நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (28920)
05. நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08. திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)
09. கொக்குவில், இந்து, 1992, அனுசம், Aca[UK], BBA[Australia], Bsc LLM[UK], UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.
(6507)
S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 803 8193



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## மணமகள் தேவை

1992, 1993, 1994, 1998
கனடாவில் வசிக்கும்
மணமகன்களுக்கு மணமகள் தேவை.
பதிவு செய்யும் முதல் 20 பேருக்கு
பதிவுக்கட்டணம் இலவசம்....
(1898)
077 408 8241
உங்கள் பாதுகாப்பே எங்களின் முன்னுரிமை!



## வேலையாட்கள் தேவை

வவுனியா / கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(1893)
076 889 1308
077 606 1333



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4767)
076 825 7716 (ஆகாஸ்)





## லிங்கேஸ்வரா

சாணை பிடிக்கும் இடம்
சலூன் கத்தரிக்கோல்கள்
சலூன் கட்டர்கள்
தையல் கத்தரிக்கோல்கள்
என்பன சாணை பிடித்துக் கொடுக்கப்படும்.
(திருத்த வேலைகளும் செய்துக் கொடுக்கப்படும்.)
(6500)
தொடர்புகளுக்கு: 074 187 3519
மக்கள் வங்கிக்கு முன்பாக சங்கானை வீதி, அலுக்கைச் சந்தி, அளவெட்டி, யாழ்ப்பாணம்.



## துப்பரவுப்பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு துப்பரவுப் பணியாளர் தேவை. யாழ்.மாநகர சபைக்குட்பட்டோர் விரும்பத்தக்கது.
076 097 3121



## முதியோர் பராமரிப்பு

பாஷையூரில் வசிக்கும் வயது முதிர்ந்த பெற்றோரைப் பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை.
(C-4764)
தொடர்பு இலக்கம்:
076 784 6224



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 3 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாகவும் ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நன்னீரூற்று
- 18 அடி பாதையுடன்

(1897)
தொடர்புகளுக்கு:
074 029 2338, 076 990 3039



## யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(6308)





## மணமகள் தேவை

03.12.1993 இல் பிறந்த, கௌரவ குலத்தைச் சேர்ந்த புனர்பூசம்(4ம் பாதம்), கடக ராசி, சூரியன் / செவ்வாய் கொண்டவரும் செலான் வங்கியில் அதிகாரியாக 07 வருடம் பணியாற்றி தற்பொழுது UK யில் M.sc(Business managment) முடித்தவரும் முன்னைய பிரபல யாழ். மாவட்ட கிரிக்கெட் வீரருமாகிய மணமகனுக்கு நல்ல குணமுள்ள படித்த கௌரவ குலத்தைச் சேர்ந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
மணமகள் UK யில் வசிக்க விருப்பம் கொண்டவராக இருக்க வேண்டும்.
(6491)
தொடர்புகளுக்கு: 077 656 0003
(இளைப்பாறிய வங்கி முகாமையாளர்)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org